# அரசியல் தீர்வுக்கு அமைதிச் சூழ்நிலை தேவை

மாநகராட்சி மன்று
30 - 5 - 1993

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 18 இதழ் 105
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 31 — 05 — 1993

## — பிரதமர் ரணில் பேட்டி

(கொழும்பு)
இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான திட்ட மொன்றை முன்வைப்பதற்கு அமைதியானதொரு சூழ்நிலை தேவை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 'வீரகேசரி வாரமலருக்கு' அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்திற்கு தற்போதைய அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது. இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக காலம் சென்ற ஜனாதிபதி பிரேமதாசா இவை வெளிவான யோசனைகளின் அடிப்படையில் செயற்பட்டுக்கொண்டிருந்தார். மாகாணசபைத்
(4ம் பக்கம் பார்க்க)

## கருத்துக் கணிப்பிற்கு புலிகள் தயார்

(பாரீஸ்)
தமிழர்களின் அபிலாசைகளை அறிந்துகொள்வதற்கு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் திரு. லோறன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

பாரிஸிலிருந்து கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
(4-ம் பக்கம் பார்க்க)

## ● உறவில் பெரும் விரிசல்

# ரெலோ - பொலிஸார் மோதல்

# மன்னாருக்கு ராணுவம் விரைவு

## வங்காலையில் சம்பவம்

(கொழும்பு)
மன்னார் - வங்காலைப் பகுதியில் பொலிசாருக்கும் ரெலோ குழுவினருக்கும் இடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட கடும் மோதலையடுத்து, விசேட இராணுவப் பிரிவு மன்னாருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வங்காலையிலிருந்து மன்னாருக்கு சென்றுகொண்டிருந்த பஸ்ஸிற்கு பாதுகாப்பு வழங்கும் நிமித்தம் அதில் பயணம் செய்த இரு ரெலோ உறுப்பினர்களை பொலிசார் தமது சோதனை சாவடியில் வைத்து கைதுசெய்ததாகவும் இவர்களில் ஒருவரை பொலிசார் தாக்கியதையடுத்து பதிலுக்கு ரெலோ அமைப
(4-ம் பக்கம் பார்க்க)

## கட்சி தாவல் தடுப்பு சட்டத்தை நீக்க அரசு தீவிர முயற்சி

(கொழும்பு)
தென்மாகாணம், வடமேல் மாகாண சபைகளின் ஆட்சியை உறுதியாகக் கைப்பற்றும் நோக்கில் தற்போது உள்ள ஒரு கட்சி தாவல் தடுப்பு முறையை மாற்றுவதற்கு அரசு. நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என்று 'லக்திவ' முன்னாள் ஆசிரியர் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் கூறியதாவது: தென்மாகாணத்தில் ஐ. தே. க.வுக்கு 27 ஆசனங்களும், எதிர்க்கட்சிகளுக்கு 28 ஆசனங்களும் இருக்கின்றன.
(4-ம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்குமாறு ஜனாதிபதிக்கு கட்சி வற்புறுத்து

(கொழும்பு)
இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு, ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவையும், கட்சியின் உயர் மட்டத்தையும் வலியுறுத்தி வருகின்றனர்

இந்தத் தீர்வு யோசனையை உடனடியாக முன்வைக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் தீவிர தேடுதல்

(கொழும்பு)
கொழும்பு நகரில் கடந்த சில தினங்களாக பாதுகாப்பு படையினர் பெருமெடுப்பில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

விடுதலைப் புலிகள் தலைநகரிலும் பல தாக்குதல் திட்டங்களுடன் ஊடுருவிவிட்டதாக கூறியே இந்த தேடுதல் பெருமெடுப்பில் நடந்து வருகிறது.

இதுவரை 600க்கும் மேற்பட்ட தமிழர் கைது செய்யப்பட்டு பலத்த விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்

இதேவேளை தேடுதலின் போது கைது செய்யப்படுவோர் உடனடியாக விசாரிக்கப்பட்டு நிரபராதிகளாயின் விடுவிக்கப்பட வேண்டுமென அரசு உத்தரவிட்டுள்ளதாம். (ஓ)

## ஜனநாயகத்தை அரசு சாகடிக்கிறது

(கொழும்பு)
அரசாங்கம் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு பற்றிப் பேசிக்கொண்டு மாகாண சபைகளில் ஜனநாயகத்தைச் சாகடிக்கிறது என்று 'லக்திவ' முன்னாள் ஆசிரியர் விளித் ஹெற்றிகொட தெரிவித்துள்ளார்
4-ம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டுத்தூதர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)
இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதர்களை சந்தித்து நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஜனாதிபதி விஜயதுங்க விளக்கமளித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது இனப் பிரச்சினை, நாட்டின் பாதுகாப்பு நிலைமை, மற்றும்
(4-ம் பக்கம் பார்க்க)

## குருநாகலில் இன்று எதிரணிக் கூட்டம்

(கொழும்பு)
தென்மாகாண, வடமேல் மாகாண சபைகளில் தங்கள் கட்சிகளை ஆட்சியமைக்க விடாததை கண்டித்து எதிர்க்கட்சிகள் இன்று குருநாகலில் பெரும் கண்டனப் பொதுக் கூட்டத்தை நடாத்தவுள்ளன. இக்கூட்டத்திற்கு முன்னர்
(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)
இலங்கை அரசு இதுவரை தங்களை மீட்காதால், தாம் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டத்தில் இறங்கப் போவதாக, விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள
4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தமுனைபடைத்தளபதிகளை மாற்ற தீவிர ஆலோசனை

(கொழும்பு)
வடக்கு கிழக்கில் யுத்த முனைகளில் படையினருக்கு தலைமை தாங்கும் படைத் தளபதிகளின் பதவிகளில் பெரும் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏனைய துறைகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களை போன்றே ஜனாதிபதி விஜயதுங்க, உயர் அதிகாரிகளின் ஆலோசனைப்படி படைத் தளபதிகளையும் மாற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதி விஜயதுங்காவுக்கு விசுவாசமான தளபதிகளை முக்கிய பதவிகளில் அமர்த்தும்
(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வேப்பம் உரம்

வேம்பு தரும் வேப்பம் உரம் மண்ணிலிருக்கும் பூச்சி, புழுக்களை அழித்து - மண்ணை வளப்படுத்தி பயிர்களை செழித்து வளரச் செய்யும் அபூர்வ உரம். பாவித்து பயனடையுங்கள். எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34, ஆடியபாதம் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டுச் சந்தையிலிருந்து 100 யார்) (கி-133)

### வேப்பெண்ணெ

வேம்பு தரும் வேப்பெண்ணெய் கிருமி நாசினி உங்கள் தோட்டப்பயிர்களையும், எலுமிச்சை, தோடை, பலா, மா இனங்களை அழிக்கும் பூச்சிகளையும், நோய்களையும் முற்றாகக் கட்டுப்படுத்தவல்லது. 100 வீதம் சுத்தமான இதனை மருந்து தேவைகளுக்கும் பாவிக்க உகந்தது. பாவித்து பயன்பெறுங்கள். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி 34, ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டு சந்தையிலிருந்து 100 யார். (கி-132)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## இராசி பலன்

31-05-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு வைகாசி 18)

ஏகாதசி பி. இ. 2.13 வரை; அத்தம் பி. ப. 5.23 வரை; இராகு காலம் காலை 7-22 முதல் 3-52 வரை; சுபநேரம் காலை 11-52 முதல் 1-22வரை.

மேடம்: நண்பர் ஆதரவு, பணவரவு, தொழில் லாபம்.

இடபம்: கடின வார்த்தை, மனச்சஞ்சலம், உடல் அசதி.

மிதுனம்: வஞ்சனை, இனசன வெறுப்பு, தடங்கல்.

கடகம்: தாராள மனப்பண விவகாரம், காரிய சித்தி.

சிங்கம்: ஏமாற்றம், மாமனார் கவலை, கடன் சுமை.

கன்னி: பயண ஏற்பாடு, சுபகாரியம், தெய்வவழிபாடு.

துலாம்: புறங் கூறுதல், தொழில் நஷ்டம், யோசனை.

விருச்சிகம்: வெளியூர் தகவல், வாக்கு வன்மை, ஒடும்பலாம்.

தனுசு: விதண்டாவாதம், விருந்து வைபவம், பாராட்டு.

மகரம்: வேலைப்பளு, சகோதர பகை, இடைஞ்சல்,

கும்பம்: தாயாரின் நிந்தனை, பணமுடை, கடும் கினம்.

மீனம்: தொழில் முதலீடு, காரிய ஜெயம், புதிய உறவு.

ஜோதிடர்

## மக்கள் எமது சக்தியை உலகறிய செய்துவிட்டனர்

### —தொண்டமான்

(கொழும்பு)

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் மலையக மக்கள் எமதுஏகோபித்த வேண்டுகோளுக்கு செவிமடுத்து கட்சி பேதங்களை மறந்து அமோக வெற்றியை ஈட்டித் தந்துள்ளார்கள். எமது சக்தியை உலகறியச் செய்து விட்டார்கள் என்று அமைச்சரும் இ. தொ. கா தலைவருமான எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இ. தொ. கா. மாகாண சபை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். எமது மக்களுக்கு வெறுமனே நன்றி என்ற வார்த்தையை மட்டும் கூறிவிட்டு சும்மா இருந்துவிடாது எமது மக்களின் அன்றாட அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு மாகாணசபையிலுள்ள இ. தொ. கா. உறுப்பினர்கள் தீவிரமாக செயற்படவேண்டும் என்றும் அவர் கூறினார். (மீ)

## வருமானம்

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 1992 ஆண்டு 4,439 கோடி 30லட்ச ரூபாவை வருமானமாக பெற்றுள்ளது

1991ம் ஆண்டு 3,755 கோடியே 70 லட்சம் ரூபா மாத்திரம்தான் வருமானமாக பெறப்பட்டது. (ச-சி)

## ஆணைக்குழு கலைக்கப்படும்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அரசசார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயவென முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவை தற்போதைய அரசு கலைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## திட்டமிடல் பணிப்பாளர்

(தாளையடி)

பிரதேச செயலர் அலுவலகங்கள் ஒவ்வொன்றிற்கும் இரு உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களை நியமிக்கும்படி சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அபிவிருத்தி திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

ஜனசவியத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரிப் பகுதியில் பதினைந்து அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (159)

## மார்பு நோய் சிகிச்சை நிலையம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் இதுவரை காலமும் செயல்பட்டு வந்த மார்பு நோய் சிகிச்சை நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்கு முன்னால் மணிக்கூட்டு வீதியில் உள்ள இலக்கம் 16, கட்டடத்தில் இந்நிலையம் தற்போது செயல்பட்டு வருகிறது. (154)

## தட்டுப்பாடு

(நெல்லியடி)

பருத்தித்துறை தபால் நிலையத்தில் முத்திரைகளுக்கு பெரும தட்டுபபாடு ஏற்பட்டுள்ளது

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

இலங்கை

## 1993-ம் ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கு புகைப்படம் எடுத்தல்


11-09-1993இல் நடைபெறவுள்ள பொதுபட்டமளிப்பு விழாவின்போது புகைப்படம் (கலர்) எடுப்பதற்கு படப்பிடிப்பாளரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. படம் எடுப்பதற்கு விண்ணப்பிக்க விருப்பம் உடையவர்கள் தாங்கள் எடுத்துள்ள படங்களின் மாதிரிப் பிரதியுடன் தமது தகுதியைக் காட்டும் பிறசான்றுகளுடனும் 23-6-93ஆம் திகதி பகல் 10-00 மணிக்கு எனது அலுவலகத்தில் சந்திக்கவும்.

'போஸ்ற்காட்' பருமனுள்ள படப்பிரதி ஒன்றிற்கு உரிய விலைக் கூற்றை பொறியிடப்பட்ட கடித உறையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(ஏ-3163)




1. ஐந்து வெற்றுப்போத்தல்கள் [ஜாம் அல்லது நெல்லிரசம்] கொடுத்து ரூபா 25/- பெறுவதுடன் அதிர்ஷ்ட சீட்டை பெற்றுக்கொள்ளவும்.
2. மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1-ம் பரிசு — சுவர்க்கடிகாரம்
2-ம் பரிசு — எவர்சில்வர் வீட்டுப்பாவனைப் பொருட்கள்
3-ம் பரிசு — மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்

மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

பின்வரும் இடங்களில் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக்கொள்ளமுடியும்;

1. ரேஸ்ட்லைன் இன்டஸ்றீஸ் 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
2. அறிவகம் சாவகச்சேரி,
3. சுமாஸ் பேக் ஹவுஸ் நெல்லியடி.
4. சுந்தரம் அன் சன்ஸ் சுன்னாகம்
5. சித்திவிநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு, சுன்னாகம்
6. சவாறிஸ் சுண்டுக்குளி,
7. நீதினி 'Q' கந்தரோடை றேட், சுன்னாகம்
8. இ. இராசதுரை பத்திரிகை விற்பனைநிலையம் இருபாலைச் சந்தி

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(எ3084)



**கோண்டாவில் தில்லையம்பதியில் இன்று வசந்த உற்சவ திருவிழா**

ராகம்: ரஞ்சனி

அபிராமிப் பட்டருக்கே அருள்
மழை சொரிந்தவளே
ஆடிப்பூரத்திரு நாளில் கன்னிகை
யாய்த் திகழ்ந்தவளே
தில்லையம்பதி நாயகியே சிவகாம
சுந்தரியே
வைகாசி வசந்த நாளில் ஜோதி
வடிவானவளே
சிவபெருமான் மகிழும் சிவேஸ்வரி
ரஞ்ஜனி
தில்லையம்பதியாளே சிவகாம
சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா-தேவி

ஆக்கம்:
கலைமாமணி ந வீரமணிஐயர்
(கி143)

சூராவத்தை முத்துமாரியம்மன் கோவில்

**பரிபாலனம்**

07-12-1992 ஈழநாடு வெளியீட்டில் எம்மால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் சார்பாக சூராவத்தை

**முத்துமாரியம்மன் கோவில் தர்மகர்த்தாசபை,**

கோவிற் குருக்கள் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் சண்முகானந்தக்குருக்கள் அவர்களிடமிருந்து கோவில் திறப்புகளை மீளப்பெற்று

**கோவில் பரிபாலனத்தை**

மேற்கொண்டு வருகின்றது என்பதை அம்பாள் அடியார்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

சு. மகேஸ்வரலிங்கம்,
செயலாளர்.

சூராவத்தை
முத்துமாரியம்மன் கோவில்
பரிபாலன சபை, சுன்னாகம்.

(கி-161)

# ஆட்சிசெய்யும் தகுதி ஜெயலலிதாவிற்கு இல்லை!

# தமிழக மக்கள் உணரத் தொடங்கியுள்ளார்கள்!!

## —வெரித்தாஸ் கண்ணோட்டம்

இந்தியாவின் மத்தியில் ஆளும் கட்சியாக இருக்கும் இ. காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தும் தனது மாநிலங்களில் ஏதாவது சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்றால் அதைக் கண்டு கொள்வதில்லை. ஆனால் இ. காங்கிரஸ் ஆட்சி நடைபெறாத பிற மாநிலங்களில் சிறிது சட்ட ஒழுங்கு பிரச்சினை என்றாலும் அதை பூதாகரப்படுத்தி மாநில அரசை கலைப்பதுதான் ஒரே வழி என்று மக்களை நம்பச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவது உண்டு.

இந்த வகையில்தான் 1991ம் ஆண்டு விடுதலைப்புலிப்போராளிகள் தமிழ்நாட்டில் உலா வருவதாக இ. காங்கிரஸின் வற்புறுத்தலின்படி தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டது. குடியரசு தலைவரின் ஆட்சி அமுல் செய்யப்பட்டது.

அதே குடியரசு தலைவரின் ஆட்சியில் தமிழகம் இருந்த போதுதான் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டார். தற்போது 1993ல் தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகளின் ஊடுவல் அதிகரித்துள்ளது என கதறத் தொடங்கியுள்ளது மத்திய அரசு. இது தமிழக அரசைக்கலைப்பதற்குரிய முன் ஒத்திகையோ என சந்தேகிக்க தோன்றுகிறது.

தமிழ் நாட்டில்சட்டஒழுங்கு சீர்குலைவு என்றால் அதற்கு விடுதலைப்புலிகள் தான் காரணம் என்றாகிவிட்டது.

இ. காங்கிரஸ் கட்சியுடன் அ. தி. மு. க. கூட்டணியாக இருந்த நேரம் விடுதலைப்புலிகளின் பிரச்சினை தமிழகத்தில் ஒரு சட்ட ஒழுங்கு பிரச்சினையாக இ. காங்கிரஸிற்கு தெரியவில்லை. அ. தி. மு. கவுடனான கூட்டணி முறிந்தவுடன்தான் தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் அதிகரித்து விட்டதாக இ. காங்கிரஸ் நினைக்கத்தொடங்கியிருக்கிறது.

அ. தி. மு. க. அரசு மீது சுமத்தப்படும் அடுக்கடுக்கான ஊழல் குற்றச்சாட்டுகள் சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சிகளை அ. தி. மு. க. எம், எல். ஏக்கள் சுதந்திரமாக இயங்க விடாமல் தடுப்பது, சிறையிலிருந்த புலிப்போராளிகள் தப்பிச் சென்றிருப்பது, ஜெயலலிதாவிற்கு எதிராக தேர்தல் கமிஷனிடம் தரப்பட்டிருக்கும் மனுக்கள், சிறுபான்மையினரை ஒடுக்கும் தமிழக அரசின் கெடுபிடிச்சட்டங்கள், சந்தன மரக்கடத்தல் வீரப்பனைப் பிடிக்க இயலாத தமிழக அரசின் கையலாகாத்தனம் என இவ்வாறு அ. தி. மு. க. கட்சி தமிழகத்தை ஆள தனது தகுதியை இழந்து வருகிறது என்பதற்கான வலுவான காரணங்கள் பல உள்ளன.

கட் அவுட் கலாசாரம், விளம்பர மோகம் இரண்டு கலாசாரத்தை தமிழகத்தில் விதைப்பது என எத்தனையோ துணைக்காரணங்களும் உண்டு.

அ. தி. மு. க. சரி முதல்வர் ஜெயலலிதாவும் சரி தமிழ் நாட்டை ஆள தகுதி படைத்தவர்கள் அல்ல என தமிழ் நாட்டின் பெரும்பான்மை மக்கள் நினைக்கத்தொடங்கி விட்டதாக பல கருத்துக் கணிப்புகளும் கூறுகின்றன.

அ. தி. மு. க. அரசு கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடந்தால் அ. தி. மு. க. ஆட்சியை பிடிக்க முடியாது என்னும் நிலை இருப்பதால் அ. தி. மு. க அரசைக்கலைக்க தருணம் பார்க்கிறது இ. காங்கிரஸ் கட்சி என நம்பப்படுகிறது.

மக்கள்செல்வாக்கை இழந்து வரும் அ. தி. மு. கவிற்கு எதிராக முதலில் மக்கள் கருத்தை திரட்ட தமிழக காங்கிரஸின் இரு முக்கிய தலைவர்கள்வாழப்பாடி ராமமூர்த்தியும் கருப்பையா மூப்பனாரும் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்யவுள்ளார்கள்.

அடுத்த கட்டமாக தமிழகத்தின் புதிய ஆளுநராகடாக்டர் சென்னா ரெட்டி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் அ. தி. மு. க. அரசு கலைக்கப்படும் முன் வெள்ளோட்டம் பார்க்க புதிய ஆளுநரை மத்திய அரசு நியமித்திருக்கிறதே என்று எண்ணத்தோன்றுகிறது.

மாநில அரசை ஒரு பொம்மை என நினைத்துக் கொண்டு மத்திய அரசு மாநில அரசுகளைக் கலைப்பது இந்திய கூட்டாட்சியில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் அபாயத்தை மத்திய அரசு மனதில் கொள்வது நல்லது.

புதுடில்லியில் இருந்து கொண்டு சென்னையில் அரசைப் பந்தாடுவதை கௌரவம்மிக்க எந்த அரசும் ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல சமீபத்தில் நடந்த இடைத்தேர்தலில் தோல்வியைத்தழுவியுள்ள இ. காங்கிரஸ் தனக்கு உண்மையிலேயே மக்கள் மத்தியில் செல்வாக்கு உயர்கிறதா தாழ்கிறதா என்பதை சுயபரிசோதனை செய்வது நல்லது.

பல ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி மக்கள் மத்தியில் செல்வாக்கு சரிந்திருக்கும் முதல்வர் ஜெயலலிதா இந்தப் பதவிக்கு தகுதியானவரா அவர் இந்தப் பதவியில் தொடரவேண்டுமா என்பதெல்லாம் கேள்விக்குரிய அம்சங்கள்.

முதல்வர் ஜெயலலிதா தனது அரசு ஆட்டம் கண்டு விட்டதை உணரத்தொடங்கி விட்டார் என்றே படுகிறது. அதனால் தான் தனது தனிப்பட்ட விரோதி என்று கூறப்பட்ட வீரப்பனை ஜெயலலிதா தற்போது அமைச்சராக்கியிருக்கும் விஷயம். இது அவர் கட்சியை கட்டுக்கோப்புடன் வைத்திருக்க முயற்சிப்பதை காட்டுகிறது.

மேலும் மக்களின் அனுதாபத்தைப் பெறும் நோக்கில் தனது வீட்டின் மேலே அடையாளம் தெரியாத விமானம் பறந்தது என்னும் அறிவிப்புகள்.

மக்களுக்கு உருப்படியான செயல் திட்டங்களை செயல்படுத்துவதை விட்டு விட்டு காவிப் பவனி, காவில் விழுவது போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி தற்போது மக்களின் அனுதாபத்தை தேட முயற்சிப்பது கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் போன்றது.

தமிழகத்தில் தேர்தல் நடந்தால் எத்தனை முயற்சிகள் எடுத்தாலும் ஆட்சியை தனியாக பிடிக்க இயலாத இ. காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் மாநில அரசைக்கலைக்க முயற்சிப்பதைவிட அ. தி. மு. க அரசின் தலைமையை மாற்ற நல்லதொரு எதிர்க்கட்சியாக செயற்படுவது நலன்பயக்கும். (வி)

---

### 2 மாகாணசபைகளில்

## மலையகத் தமிழருக்கு அமைச்சர் பதவிகள்

(கொழும்பு)

மத்திய மற்றும் ஊவா மாகாண சபைகளில் அமைச்சர்கள் பதவி மலையகத்தைச் சேர்ந்த இருவருக்கு வழங்கப்படலாமென தெரிவிக்கப்படுகிறது.

திரு. எஸ். சதாசிவம், திரு. எம். சச்சிதானந்தம் ஆகியோரே அமைச்சர் பதவிகள் பெறவுள்ளவர்களாவர். (க-சி)

---

### தெமட்டகொட

## உற்பத்தி ஆலையில் 100 பெண்கள் மயக்கம்

(கொழும்பு)

தெமட்டகொடயிலுள்ள இரசாயன பொருள் உற்பத்தி ஆலையொன்றில் பணியாற்றும் சுமார் நூறு இளம்பெண்கள் நேற்று முன்தினம் இரவு கடமையின்போது திடீரென மயக்கமுற்றனர்.

திடீரென மயக்கமுற்ற இவர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். (ரி)

---

## மலையக இளைஞர்கள் பலர் கொழும்பில் அடிக்கடி கைது

(கொழும்பு)

தொழில் நிமித்தம் கொழும்பில் தங்கியுள்ள மலையக இளைஞர்கள் பொலிசாரினால் அடிக்கடி கைதுசெய்யப்பட்டுவருகிறார்கள்.

இந்த இளைஞர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதினால் மலையகத்தில் அமைதியற்ற நிலை தோன்றுமென்றும் இவர்களை அனாவசியமாக கைது செய்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்று பதுளை மாவட்ட எம். பி. டி. வி. சென்னன் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுள்ளார். (ரி)

---

## வெளிநாட்டு தூதுவர்களை ஜனாதிபதி சந்திப்பார்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதுவர்களையும் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின்போது அரசாங்கத்தின் கொள்கை, இன்றைய நிலை பற்றி ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா விளக்குவார்.

வெளிநாட்டு தூதுவர்களுக்கு ஜனாதிபதி மதிய விருந்து உபசாரமும் அளிக்கவுள்ளார்.

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்திப்பது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

---

### 100 பயணிகள் பலி

(லூவாண்டா)

அங்கோலாவில் யுனிற்றா போராளி அமைப்பு ரெயில் ஒன்றின்மீது நடத்திய தாக்குதலில் 100 பயணிகள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் 100 பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. (வி)

---

## இன்று

(அரியாலை)

ஆனைக்கோட்டை- உயரப்புலம் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் வைகாசி மாத வணக்க மாத ஆராதனை நாளை இன்று திங்கட்கிழமை நடைபெறும். (59)

0 0

(அரியாலை)

வைத்திய கலாநிதி ஜே பி கி. பிலிப்ஸ் 2-வது ஆண்டு நினைவுதினக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு புனித யாகப்பர் மண்டபத்தில் வைத்திய கலாநிதி திரு. கெங்காதரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (59)

---

## ஜெயலலிதாவுக்கு ராசியான எண்

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு ராசியான எண் ஒன்பது எனக் கூறப்படுகிறது. அவர் தனது அமைச்சரவையை ஒன்பது எண் வரும் வகையில் அமைத்திருக்கிறார்.

கடந்த முறை 18 அமைச்சர்கள் இருந்தனர். தற்போது மாற்றியமைக்கப்பட்டிருக்கும் அமைச்சரவையில் 27 அமைச்சர்கள் உள்ளனர். இதேபோல முதல்வரின் கார் நம்பரும் ஒன்பதுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி)

---

### முதலிடம்

(யாழ்ப்பாணம்)

சுற்றுடல் தினத்தையொட்டி யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகளிடையே நடைபெற்ற வினாடி வினா போட்டியில் யாழ். பரியோவான் கல்லூரி முதலாம் இடத்தையும், யாழ். இந்துக் கல்லூரி இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளன.

யாழ். பரியோவான் கல்லூரி மாணவனுனவித்தியன் கருணாகரன் நாற்பத்தேழு புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்றுள்ளார். (159-இ)

---

## தி. மு. க.வுடன் ஒருபோதும் அ. இ. மு. க. இணையாது

(சென்னை)

தி. மு. க. கழகத்தால் புறக்கணிக்கப்பட்ட ஒரு கட்சி என்றும் அதனுடன் தமது கட்சி இணையும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் அ. தி. மு. க துணைப் பொதுச் செயலாளர் எஸ். டி சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையில் அக்கட்சியுடன் இணைவதற்கு அ. தி. மு. க. பொதுச் செயலாளர் விரும்பியதுபோன்ற தொனி உள்ளதென்றும் ஆனால் அத்தகைய விருப்பம் ஏதும் தமது கட்சிக்கு இல்லையென்றும் அவர் மேலும் கூறினார். (வி)

---

### பிறப்பு, இறப்பு பதிவு

## ஆவணங்களை எடுத்து வர கூட்டுப்படை அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்குரிய தேவையான பிறப்பு, இறப்பு பதிவுக் கோவைகள், ஆவணங்களின் மூலப் பிரதிகள் ஆகியவற்றை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளதாக வடபிராந்திய உதவிப் பதிவாளர் நாயகம் ஜே. என். பேரமன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல் வெளியிடுகையில்; இந்த ஆவணங்கள் குமாரி கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் உடன் வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக வடபிராந்திய உதவிப் பதிவாளர் நாயகத்தின் பணிமனையின் செயற்பாடுகள் அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேற்படி பணிமனை யாழ். செயலகத்தின் இரண்டாவது மாடியில் செயற்படும் என்றும் அநேகமாக யூன் மாத நடுப்பகுதியில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் கொழும்பில் தங்கியிருந்த இரு மாத காலத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து விண்ணப்பித்து பல மாதங்களாக பதிவாளர் திணைக்களத்தில் தேங்கிக்கிடந்த ஆயிரக்கணக்கான பிறப்பு, இறப்பு பதிவு விண்ணப்பங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார். (71-க-இ)

---


## புகை பொருள் மறுப்புத் தினம்

## மே 31

சர்வதேச ரீதியான மேற்படி விழாவானது 31-5-93 (இன்று) திங்கள் காலை 9மணிக்கு தொல்புரத்திலுள்ள வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனப் பணிமனையில் தலைவர் திரு. இ. கெங்கராஜா அவர்கள் தலைமையில் கொண்டாடப்படவுள்ளது. இதில் பலஅறிஞர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெறியாளர் குழுவினர்,

(கி-164) வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்.

# 3,800 சிங்களக் குடும்பங்கள் மட்டக்களப்பில் குடியேற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டு முடிவடைவதற்குள் 3,800 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளன.

இதன்படி 3,200 சிங்களக் குடும்பங்கள் மகாவலி 'பி' வலயத்தில் குடியமர்த்தப்பட இருந்தன எனினும் அது நிறைவேற்றப்படவில்லை. கடந்த ஏப்ரல் 2ம் திகதி முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா விடுத்த உத்தரவுக்கிணங்க முன்னர் தமிழ்ப் பகுதியாக இருந்து இணைக்கப்பட்டுத்தப்பட்ட வெலிக்கந்தயில் மேலும் 600 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

மிகுதி 3,200 குடும்பங்களையும் மகாவலி 'பி' வலயத்தில் இவ்வருட இறுதிக்குள் குடியமர்த்த ஜனாதிபதி விஜயதுங்க இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். (க-ஜ)

## தொண்டர் ஆசிரியர் மகஜர்

(யாழ்ப்பாணம்)

நேற்று நடைபெற்ற தொண்டர் ஆசிரியர்களின் கூட்டத்தில், நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்கள் புதிய ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அனுப்பியுள்ளனர். (இ)

## வெளிநாட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டவர்களின் பொருளாதார முதலீடு, உல்லாசப் பயணத்துறை உட்பட பல விடயங்கள் குறித்தும் பேசப்பட்டது

இலங்கையிலுள்ள பெரும்பாலான வெளிநாட்டு தூதர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ)

## குருநாகலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென் வடமேல் மாகாணங்களில் மாதிரி மாகாண சபையை அமைக்கவும் எதிர்கட்சிகள் முடிவு செய்துள்ளன வாம்

இவ்வாறு மாதிரி மாகாண சபைகள் அமைக்கப்பட்டால் இப்பகுதிகளில் அரசியல் நெருக்கடி பெருமளவில் அதிகரிக்குமென தெரிவிக்கப்படுகிறது. (இ)

# மினிமுகாம் தகர்ப்பில் பெண்புலிகள் முன்னணியில்

(யாழ்ப்பாணம்)

பொலநறுவை மாவட்டம் ஜெயந்திபுர பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ மினிமுகாம் தகர்ப்பில் விடுதலைப்புலிகள் மகளிர் பிரிவு முன்னணியில் நின்று போரிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலின் போது இராணுவத்தினரை ஆயுதங்களைப் போடுமாறு புலிகள் பணித்து ஆயுதங்களைக் கைப்பற்றினார்களாம்.

இத்தாக்குதலில் 6 படையினர் உயிரிழந்ததுடன் 15 காவலரண்கள் தாக்கப்பட்டதும் இராணுவத்தினர் தங்கியிருந்த 10 வீடுகள் விடுதலைப் புலிப்போராளிகளால் நிர்மூலமாக்கப்பட்டதும் தெரிந்ததே. (க-சி)

## இனப் பிரச்னைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் ஐக்கியதேசியக் கட்சி தெரிவுக்குழு முன் இனப் பிரச்னைக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதன் மூலமே, தெரிவுக் குழுவை ஒரு பயனுள்ள முயற்சியாகக் கருதலாமெனப் பல கட்சிகளும் கூறி வருவதும் குறிப்பிடத்தக்கது. (மீ-இ)

# வடமராட்சி கடலில் பீரங்கித் தாக்குதல்

(தாளையடி)

தாளையடி- செம்பியன்பற்று கடற்பரப்பில் நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படைப்பீரங்கிப்படகு ஒன்று கரையை நோக்கி பீரங்கி வேட்டுக்களை தீர்த்தது.

கடந்த சில நாட்களாக இப்பகுதில் கடற்பிராந்தியத்தில் கடற்படைப் பீரங்கிப் படகுகளின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகிறது.

கட்டைக்காடு வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அண்டியகடற்பரப்பில் கடந்த இரு நாட்களாக கடற்படைப் பீரங்கிப்படகுகள் நங்கூரமிட்டிருப்பதைக் காணக்கூடியதாயிருந்தது. (163-இ)

## கருத்துக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த அரசு விரும்புவதாகப் புதிய ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்று, விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுக்களுக்குத் தயாராக இருப்பதாக அண்மையில் திரு. திலகர் கூறியதும் தெரிந்ததே. (ரி-இ)

## ஜனநாயகத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று வடக்கு-கிழக்கு மாகாண சபையில் உள்ள நெருக்கடிகளிலும் பார்க்க, மேல் மாகாண சபையில் பிரச்னைகள் அதிகமாக உள்ளது.

மாகாண சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஆட்சியில் இருந்த காலம் போய், இப்பொழுது எதிர்க் கட்சிகள் வசம் ஆட்சி இருப்பதால் பல பிரச்னைகளை எதிர்நோக்கவேண்டி இருக்கிறது என்றார். (சு-இ)

# தமிழக அரசுக்கு நெருக்கடி இல்லை — புதிய ஆளுநர்

(சென்னை)

தமிழக அரசுக்கோ- முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கோ எந்தப் பிரச்னையையும் எழுப்பும் நோக்கம் எனக்கில்லை. ராஜஸ்தானில் ஆளுநராக நான் பொறுப்பேற்ற போது கூட இப்படிப்பட்ட யூகங்கள் இருந்தன. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. இவ்வாறு தமிழக புதிய ஆளுநர் சென்னாரெட்டி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானில் ஆளுநராக இருந்த சென்னாரெட்டி இன்று தமிழக ஆளுநராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவிருப்பது தெரிந்ததே.

அவர் மேலும் கூறியதாவது: ஒரு மாநில ஆளுநர், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் அன்றாட அலுவல்களில் குறுக்கிட முடியாது. ஆனால் அதே நேரம் அந்த அரசுக்கு ஆலோசனை வழங்கலாம் என்றார். (இ-இ)

## உறவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின் இரு பொலிசாரைக் கடத்திக் கொண்டுபோய் தமது காவலில் வைத்ததை யடுத்து இம்மோதல் நிலை உருவாகியது

இதனையடுத்து மேலதிக இராணுவத்தினர் இங்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து மன்றூசில் ரெலோ முகாம் கண்காணிக்கப்பட்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-க)

# ஆசியர்களுக்கு எதிராக சேர்ச்சிலின் கூற்றால் அரசியல் குழப்பம்

(லண்டன்)

பிரிட்டனில் ஆசியர்களின் குடியேற்றம் கட்டுப்படுத்தப் படவேண்டும் என்றும் ஆசிய நாட்டவர்களின் குடியேற்றம் பிரிட்டிஷ் வாழ்க்கைமுறைக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கிறது என்றும் பிரிட்டனின் யுத்த காலத்தலைவர் வின்செஸ் சேர்ச்சிலின் பேரனை திரு. சேர்ச்சில் தெரிவித்த கருத்து பெரும் அரசியல் சூறாவளியை கிளப்பியுள்ளது.

கொன்சவேட்டிக் கட்சியின் எம். பி.யான திரு. சேர்ச்சில் இந்திய உபகண்டத்திலிருந்து ஓய்வு ஒழிச்சலின்றி வந்துகொண்டிருக்கும் குடியேற்றக்காரர்களுக்கு அரசாங்கம் வழிகளை மூடவேண்டும் என்று கூறியுள்ளார். (மி-இ)

## கட்சி தாவல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சியில் இருந்து ஒருவரைப் பெற்றுக்கொண்டால் தென்மாகாணத்தில் ஐ. தே. க. ஆட்சியை உறுதியாகக் கொண்டு செல்லலாம்.

இதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் எதிர் நடவடிக்கையில் ஈடுபடலாம். இச்சட்டத்தை அமுல்படுத்தபெரும்பான்மை மூன்றில் இரண்டு தேவை இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ளவர்கள் சிலர் ஆதரவு அளிக்கலாம் எனவும் தெரிவித்தார். (சு-இ)

# பிரேமா நியமித்த ஆணைக்குழு 'விஜய'வால் நீக்கம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஆராயவென முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவை ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க கலைக்கத் தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்க பதவியேற்ற பின்னர் பிரேமதாஸாவால் ஏற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களிலெல்லாம், அரச நிறுவனத் தலைமைகளிலும் மாற்றங்கள் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (சு-இ)

# 6 சோதனை நிலையங்கள் புதிதாக அமைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்கும் வாழைச்சேனைக்கும் இடையில் புதிதாக 6 சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மீது தீவிர கண்காணிப்பு செலுத்துமுகமாகவே மேற்படி சோதனை நிலையங்களை இராணுவத்தினர் அமைத்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை கும்புறுமூலைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சோதனை நிலையம் இராணுவத்தினரால் அகற்றப்பட்டுள்ளது. (க-இ)

## யுத்தமுனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலின் பின்னர் அவ் அவ்யோசனைகளை வெளியிட எண்ணியிருக்கலாம் என்று நினைத்தோம்,

அவரது மனதில் உள்ள யோசனைகள் எவை என்பது எனக்குத் தெரியாது. ஆனால் மாகாணசபை தேர்தலின் பின்னர் மக்களிடமிருந்து ஆணை ஒன்றைப் பெற்றுக் கொண்டபின்னர் வடக்கு கிழக்குப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை புதிதாக ஆரம்பிக்கலாம் என இறுதியாக நடைபெற்ற ஐ. தே. கட்சியின் நிறைவேற்றுக் குழு மாநாட்டிலும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் வடக்கு கிழக்குப் பிரச்னைக்கு தீர்வுகாணும் முயற்சியில் நாம் இன்னமும் நம்பிக்கை இழந்துவிடவில்லை. ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க தலைமையிலான அரசு இப்போது தான் பதவி ஏற்றுள்ளது. நிலைமைகளை அவதானித்து முயற்சிகளை தொடருவோம்.

இனப்பிரச்னைக்கு எவ்வாறேனும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணப்படவேண்டும். அதைவிட்டால் என்றைக்குமே இனப்பிரச்னையை தீர்த்து வைக்க முடியுமென நான் நினைக்கவில்லை. இப்பிரச்னைக்கு இராணுவ ரீதியாக தீர்வுகாண முடியாது.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவிலும் பலவிதமான யோசனைகள் ஆராயப்பட்டுள்ளன. புதிய யோசனைகள் முன்வைப்பதைவிட ஏற்கனவே முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் குறித்து ஒரு இணக்கத்துக்கு வருவது அவசியமாகும்.

அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைப்பதற்கு அமைதியான சூழ்நிலை ஒன்று உருவாகவேண்டியதும் அவசியமாகும். பிரிவினைவாதிகளை நிராயுதபாணிகளாக்க வேண்டிய தேவையுமுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வுத் திட்டம் ஒன்று தயாரானால், அதனை நடைமுறைப்படுத்தச் இலங்கை அரசியல் அமைப்புத் திருத்தங்கள் அவசியமாகும். அதிகாரப் பரவலாக்கலை அதிகரிப்பதன் மூலம், இனப்பிரச்னைக்குத் தீர்வு காணலாம். ஆனால் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக இதுவரையும் இணக்கம் காணமுடியாமல் உள்ளது. இது ஒரு பிரதான விவகாரமாகும்.

ஏனைய விவகாரங்களில் இணக்கப்பாடு சாத்தியமானதாகவுள்ளது. பல விவகாரங்களில் நாம் முன்னேற்றம் கண்டுள்ளோம்"

நாடாளுமன்ற தெரிவுக்குழு அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள போதிலும் விடுதலைப்புலிகளும் வேறு அமைப்புக்களும் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை. அதிகாரபரவலாக்கல் தொடர்பாக இன்னமும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வராமல் தமிழ் அமைப்புகளும் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-இ)

# லலித் கொலை விசாரணையில் புதிய திருப்பம்?

(கொழும்பு)

ஐ. ஐ. தே. முன்னணித் தலைவர் லலித் அத்துலத்முதலி கொலை விசாரணையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத்துறை துப்பறிவாளர்கள் தெரிவித்துள்ளார்கள்

இக்கொலை விசாரணையில் ரகுநாதனே கொலையாளி என்று நீதிமன்றத் தீர்ப்பு உறுதிப்படுத்துகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக்கொலை விசாரணையில் அடுத்த சில தினங்களில் முக்கிய திருப்பம் ஏற்படலாம் என்றும் துப்பறிவாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (மி)

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் இலங்கை அரசை எச்சரித்துள்ளதாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

கடந்த ஜனவரி மாதம் அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்ததைத் தொடர்ந்து, புலிகள் தமது நல்லெண்ணத்தைக் காட்டி இரண்டு பொலிசாரை விடுதலை செய்தனர்.

சிறைப்பிடிக்கப்பட்ட 39 பொலிசாரின் பெற்றோர்கள் யாழ்ப்பாணம் வந்தால், அனைத்துப் பொலிசாரையும் விடுதலை செய்வோம் என்று விடுதலைப் புலிகள் கூறிவருகின்றனர். ஆனால் பொலிசாரின் உறவினர்களை யாழ்ப்பாணம் வருவதற்கு அரசு அனுமதித்தால், அவர்கள் தமிழ் மக்கள் படும் துன்பங்களைத் தெற்கில் கூறி, விடுதலைப் புலிகளுக்குச் சிங்கள மக்கள் மத்தியில் அனுதாபத்தைக் கொண்டு வரும் என்பதால், இலங்கை அரசு பொலிசாரின் உறவினர்களை யாழ்ப்பாணம் சென்று, பொலிசாரை மீட்க அனுமதி மறுத்து வருகின்றது எனவும் 'வெரித்தாஸ்' கூறியது. (சு-இ)

இப்பத்திரிகை; "ஈழநாடு" லிமிடெட் ஆதரவுத்தாபனம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number D/10936/D